**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 149/2015</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திரு. இராஜா முகம்மது அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **26.11.2025** |
| **பெயர்** | **மணிகண்டன்** |
| **த/பெ** | **வெங்கடேசன்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.42.எ.எம்.**

**<u>குறுக்கு விசாரணை –</u>**

1. நான் அசல் வழக்கு எண் 149/2015 4–ம் வாதியாவேன். அதே போல் அசல் வழக்கு 46/2015 ல் 7ம் பிரதிவாதியாவேன். இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும், 128/15. வழக்கு சொத்தின் 4 எல்லைகள் என்ன என்றால் கிழக்கு பக்கம் வாதியின் வீடு, வடக்கு பக்கம் பிரதான சாலை. வாதியின் வீட்டிற்கு எதிரே தான் தாவா சொத்து உள்ளது என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்தில் குறிப்பிட்டுள்ள 2 ½ செண்ட் என் பெயரில் தான் உள்ளது என்பதை காண்பிக்க நான் எந்தவிதமான வருவாய்துறை ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து மொத்தம் 19 செண்ட் என்றால் சரிதான். ஜெயம்மாள் என்பவர் வாதியின் மாமாவிற்கு 19 செண்ட் கிரையம் செய்தார் என்றால் சரியல்ல, 16 ½ செண்ட் மட்டுமே கிரையம் செய்தார். என் பிரமாணவாக்குமூலத்தில வாதியின் மாமாவிற்கு சொத்தினை யார் விற்பனை செய்தது என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கோவிந்தசாமிக்கு என் குடும்பத்தார் விற்பனை செய்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளதே தவிர ஜெயம்மாள் என்று அவரின் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1973ல் ஜெயம்மாள் வாதியின் மாமாவிற்கு எழுதி கொடுத்த வா.சா.ஆ 1

ஆவணத்தில் வழக்கு சொத்தாக குறிப்பிட்டுள்ள மேற்சொன்ன 2 ½ செண்ட் வழிப்பாதையாக தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, எங்களின் அனுபவத்தில் தான் உள்ளது. வேறு ஒரு இடத்தை தான் வழிப்பாதையாக பயன்படுத்திக் கொள்ள ஒதுக்கப்பட்டது.

3 தாவா சொத்தில் நான் அனபவத்தில் இல்லாத காரணத்தினால் தான் அதற்கான ஸ்வாதீனத்தை காண்பிக்க எந்த ஒரு வருவாய் ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. ஜெயம்மாள் எங்களின் அனுபவத்திற்காக அந்த 2 ½ செண்ட் நிலத்தை ஒதுக்கிவிட்டார். ஜெயம்மாளிடம் சட்டப்படி கிரையம் வாங்கிய காலத்தில் இருந்து பிரதிவாதிகள் தான் வழக்கு சொத்தின் ஸ்வாதீனத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 12.02.p.m.**